மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ம் நாள் திங்கள்கிழமை
இ.மஎண்.11/2024
உள்
அசல் வழக்கு எண்.10/2019

1. சா.நாராயணசாமி
2. செ.சரோஜினி
3. சு.விஜயலட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சா.கந்தசாமி (இறந்துவிட்டார்)
2. சா.ராமசாமி (இறந்துவிட்டார்)
3. தில்லையம்மாள்
4. வீரப்பன்
5. சுப்புராஜ்
6. சாந்தி
7. செல்வபிரியா
8. சூரியா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு என் முன்பு 08.08.2025 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ராமசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ஆர்.முருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது மனுவில் கண்டபடி பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடுமாறு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17, 18 மற்றும் 151–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

2.1. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். தாவா வழக்கு எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் வேறு பரிகாரம் கேட்டு பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கு நிலுவையில் இருக்கும்போதும், 2ம் பிரதிவாதி 02.12.2022ம் தேதி இறந்து விட்டனர். அவரது மனைவி மற்றும் பிள்ளைகளை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க மனு கொடுத்து மேற்படி மனுவும் அனுமதி ஆகியுள்ளது. இந்நிலையில் தாவா பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமாக இருக்கிறது. இல்லாவிடில் மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3) **<u>3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையின் சுருக்கம்</u>**:–

3.1. மனுதாரர் மனுவில் கண்ட சங்கதிகள் யாவும் மறுக்கப்படுகிறது. இதனடியில் தெளிவாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்ற யாவற்றையும் மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். மேற்படி மனுவில் பிரதிவாதி இறந்த பிறகு உரிய காலத்திற்குள் இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இம்மனு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள இறந்துபோன பிரதிவாதிக்கு இறப்பு மற்றும் வாரிசு சான்று இம்மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால் மனுதாரர் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>6) தீர்வு</u>**:–

6.1. மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். பிராதை மனுவில் கண்டபடி சீர்திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல்

செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால் தாவா வழக்கு எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் வேறு பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1, 2 பிரதிவாதிகள் இறந்துவிட்டதாகவும், அவரது மனைவி மற்றும் பிள்ளைகளை தாவா வழக்கில் கட்சிக் காரர்களாக சேர்க்க மனு கொடுத்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனுவை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், இம்மனு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்படாததாலும், கால தோஷத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை இந்நிர் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

6.3. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இருப்பினும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.11/2024
உள்
அ.வ.எண்.10/2019
**<u>உத்தரவு</u>**
நாள்– 25.08.2025.